ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2121/21 - 2019 අප්‍රේල් මස 30 වැනි අඟහරුවාදා - 2019.04.30

*2121/21 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78* (xv) (A)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாக விருப்பதாகக் கருதப்படுகின்றதும், இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிய 2091/6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/ 35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளையின் மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்.*

1A - PG 4496— 518 (2019/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(1) அதன் நிரல் I இல் "மருத்துவ விஞ்ஞான பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள நிரல் II இல் காணப்படுகின்ற பதிவு "17." ஐ நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன் :-

(2) அதன் நிரல் I இலும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற பதிவு "பொறியியல் பீடம்" என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

| | |
|---|---|
| "இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | 1. அடிப்படை விஞ்ஞானத் துறை |
| | 2. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத் துறை |
| | 3. தாதியியல் மற்றும் மகப்பேற்றுக் கல்வித் துறை |
| | 4. மருந்தியல் மற்றும் மருந்தாக்கல் விஞ்ஞானத் துறை". |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, ஏப்பிறல் 17.

05-246

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.